## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.26/2011

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 04 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

<u>நாள் : 04.03.2026</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. துரைராஜ் (DW–2) | வயது | : | 48/2026 |
| க/த பெயர் | : | திரு. முருகையன் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ;–</u>

**1.** நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். 2ம் பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் பக்கத்து தெருவை சேர்ந்தவர். எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை, பக்கத்து தெருவை சேர்ந்தவர் என்பதன் மூலம் தெரியும். பானுமதி கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை, இளங்கோவன் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**2.** எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்திட்டேனா என்றால் ஆமாம். நான் தட்டச்சு செய்து கையெழுத்திட்டேனா என்றால் இல்லை, தட்டச்சு செய்த பேப்பரில் கையெழுத்திட்டேன். அந்த நிரூபண வாக்குமூலத்தில் பானுமதி சொல்லிய விபரம் இருந்தது என்றால் சரிதான். வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் சிங்காரவேலுவின் சொத்தை ஜெயராமன் மாற்றிக்கொண்டதாக சொல்லி வழக்கு. இந்த விபரத்தை எனக்கு யார் சொல்லியது என்றால் இளங்கோவன் சொன்னார்.

**3.** தாவா சொத்து சர்வே எண், விஸ்தீரணம் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் ஜெயராமன் வீடு கட்டியுள்ளார். தாவா கிராமத்தில் எனக்கு வீடு இருப்பதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. 2009ல் ஜெயராமன் சொத்தை ஆக்கிரமிப்பதாக நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் என்னிடம் யார் சொன்னது என்றால் இளங்கோவன் சொன்னார். 2000ல் இருந்தே தாவா சொத்தானது ஜெயராமன் மற்றும் அவரது குடும்பத்தினர் வசம்

இருந்து வருகிறது என்றும், தாவா கிராமத்தில் எனக்கு எதுவும் சொத்துக்கள் இல்லை என்றும், 2ம் பிரதிவாதியின் கணவர் எனக்கு நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் வழக்கு பற்றிய விபரம் எதுவும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:31:56 +0530

District Munsif

Mannargudi.